தெய்வமேதுணை.

விநோத

ஜாலக்கண்ணாடி.

இரண்டாம்பாகம்.

இஃது,

சிறுமணவூர்

முனிசாமி முதலியாரால்

இயற்றப்பட்டு,

SIVAGAMY VILASAM PRESS

தமது

சென்னை சூளை

சிவகாமிவிலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1908.

உ

கடவுள் துணை.

விநோதஜாலக்கண்ணாடி.

காப்பு-விருத்தம்.

சரண மத்தி முகத்தன் திருவடி.
சரணம் சண்முகன் தாளிரு பொன்னடி.
சரணம், சத்தி சதங்கை மலரடி.
சரணம் சற்குரு தாளிலென் சென்னியே.

கஅ-வது மடியில்கட்டிய தேங்காயுடையுஞ்சாலம்

வணங்கவேயின்னமொரு வித்தைகேளு
வளமானதேங்காயை மடியில்கட்டி
யிணங்கவேயிருகையும் பின்னாலேத்தி
யெத்தனைதான் முடியேனும் போடச்சொல்லு
வணங்கியே சபையோர்க்கு மடியைக்காட்டி
கைகாட்டிமெய்காட்டி கதவைச்சாற்றி
பிணங்கியே பின்புரமாய் கையைவாங்கி
பகவதிவாடியென்று உடைத்துக்கட்டி
பிணங்களேபாரொன்று வெளியில்வாரீ
பேசுவார்மந்திரங்கள் செய்தானென்றே.

(வ-ம்) தேங்காயை சவுக்கத்தில் சுத்தி மடியில்கட்டிவிட்டு இரண்டுகைகளையும் பின்புரமாய்மடித்து இரண்டு பெருவிரலையும் ஒன்றின்மேல் ஒன்றுவைத்து கட்டிவிடச்சொல்லிஒருவீட்டுக்குள் சென்றுகதவைச்சாற்றி தாள்போடச்சொல்லினபிறகு நீ உட்கார்ந்துபின்னாலிருக்குங்கைகளைபுட்டத்தின் கீழாகக்கொடுத்து மெதுவாய் காலைமடித்துஉள்ளேவிட்டு கையைவாங்கினால் கட்டுப்பிரகாரமே கைபின்புறம் வந்துவிடும் தேங்காயையுடைத்து கட்டிக்கொண்டு முன்போல காலின்கீழாகக் கையைகொடுத்து பின்னுக்குவாங்கிக்கொண்டு கதவைத்தட்டி வெளியில்வந்தால் தேங்காயைப்பார்த்து ஆச்சரியப்பட்டு மந்திரஞ் செய்தானென்றே நம்புவார்கள் ஆனால் உள்ளேயிருக்கும்போது மலையாளதேவி வாடி.

மாரணக்கள்ளி வாடி சத்திரியே முன்னேவாடி. சாமுண்டி ஓடிவா வென்று சொல்லிக்கொண்டே மேற்படிதேங்காயையுடைத்துயரவேணும்.

௧௭-வது தேங்காய் நடக்குஞ்சாலம்.

மந்திரமேயில்லையென்று சொல்லாதேநீ
மதிமுக்கால்வேணுமடா மாணுகேளு
தந்திரம்பார்தேங்காயை துவாரஞ்செய்து
தலைகுடிமித்தீண்டாமே தவளம்போக்கு
தந்திரமாய் சுண்டெலியை உள்ளேவிட்டு
தடைபோட்டு மஞ்சள்பூசி குங்கமிட்டு
வந்திருக்கும் சபைநடுவே விட்டுப்பாரு
வாசலெல்லாம் புரளுமடா வசியமென்பார்.

(வ-ம்) ஒருதேங்காயை குடிமிமுதலானதுகளைப் போக்காமல் புன்னக்காய் பூரும்படியான துவாரஞ்செய்துஉள்ளிருப்பதையெல்லாம் சுரண்டிவிட்டு சுண்டெலியை உயிருடன்உள்ளேவிட்டுமேல்பில்லையைமூடி மஞ்சள்குங்குமம் பலமாய்ப்பூசி முன்னமே வைத்துக்கொண்டு சபையோரைப்பார்த்து யாராகிலும்ஒருதேங்காய் கொண்டுவந்துகொடுத்தால் அதை நடக்கச்சொல்லுவேனென்று வாங்கிக்கொண்டு மஞ்சள் குங்குமம்பூசி தூபதீபங்கொடுத்து தந்திரமாக அதை மறைத்துவிட்டு முன்தேங்காயைவிட்டால் அது ஒருயிடத்தில் நிற்காது உருண்டுகொண்டேயிருக்கும் பார்த்தவர்கள் மிரளுவார்கள்.

௧௮-வது எலுமிச்சம்பழங் குதிக்குஞ் சாலம்.

என்னவேயின்னமொரு ஜாலங்கேளு
எலுமிச்சம்பழத்தினிடை துளையுண்டாக்கி
பன்னவேரசமது களஞ்சிதாக்கி
பக்குவமாயுள்ளிறக்கி மெழுக்கடைத்து
துன்னவேவெய்யலிலே வைத்துப்பாரு
சூரியனார்காந்தியது தாக்குமாகில்
என்செய்வேன்பழத்தினது கொண்டாட்டந்தா
னியம்பலாந் தாசியென்றே எண்ணலாமே.

(வ-ம்) ஒரு எலுமிச்சம்பழத்தை எழுத்தாணியால்குத்தி (௧௨) வராகனிடைரசம்விட்டு மெழுக்கினால் துவாரத்தையடைத்துவெய்யலில் வைத்தால் சூடு எறினமாத்திரத்தில் தரையில் நிற்காது செண்டுபோல் எகுறும் அல்லது உருளும் ஆச்சரியமாயிருக்கும் ஆகிலும் சீமைகாடியில் கொஞ்சம் விட்டாலும் மிகவும் நன்றுவஊசிஸ்காந்தம் சேர்க்கவும்.

௧௯-வது நெருப்பில்லாமல் வஸ்திரங்கொளுத்துஞ்சாலம்.

ஆமப்பா பயிரளவு திமிர்பாஷாணம்
ஆருக்குந்தெரியாமல் கையில்வைத்து
வேமப்பாபஞ்சுமுதல் வஸ்திரங்கள்
வேண்டாத தெருவேறு மெடுத்துக்கொண்டு
போமப்பாபந்துபோல் சுருட்டிக்காத்து
போக்சாககாட்டியதை யூதினக்கால்
நாமப்பாவென்னசொல்வோ மெரியுஞ்சோதி
நடுவானகடவுளென்று நம்புவாரே.

(வ-ம்) திமிர்பாஷாணம் என்பதைபயரளவு எடுத்துக்கொண்டு கையை எல்லாருக்குங் காட்டிவிட்டுபஞ்சியாவது வஸ்திரமாவது தேங்காய்நாருவது பந்துபோல் சுருட்டி காத்துவாட்டமாக நின்றுமேற்படி பாஷாணத்தை அதில் நுழைத்து ஊதினால்குபீலென்றெரியும்.

௨௰-வது வாயில் நெருப்பு கக்குஞ்சாலம்.

நம்பவேயின்னமொரு ஜாலங்கேளு
நலமானகொப்பரையை மென்றுதுப்பி
நம்பியேபயிரளவு திமிர்பாஷாணம்
நயந்தொருவர் காணுமறுதட்டில்வைத்து
நம்பியேபஞ்சுதனை கவ்விக்கொண்டு
நடுக்கின்றசபையோர்க்கு நன்றாய்க்காட்டி
நம்பியேகாத்துபுர மூதினக்கால்
நமனுடைய அக்கினியின் குழியென்பாரே.

(வ-ம்) ஒரு சிறுபயரளவு திமிர்பாஷாணத்தைஉதட்டில்வைத்துக்கொண்டு பஞ்சுதனை பந்துபோல்சுருட்டி வாயில் கவ்விக்கொண்டு காத்துபோகும் வாடையாகநின்று ஊதினால் குபீலென்று பத்தி யெரியும் அதுமகா ஆச்சரியமாயிருக்கும்.

௨௧-வது பாலெடுக்குஞ்சாலம்.

பாலதனைச்சல்லாவில் தோய்த்துத்தோய்த்து
பக்குவமாயுழக்குப்பால் சீலைக்கேத்தி
பாலதனைபொருகிணற்றி லூற்றச்சொல்லி
பந்தியங்கள்கட்டியின்ன மெங்காணலும்
பாலதனைவரவழைத்துத் தருவேனென்று
பாலகனேயேவிடத்தில் சென்றுநீதான்

பாலளவே தண்ணீரை மொண்டுங்கொண்டு
பாலேந்தும் சீலையினைப் பிழிந்துவாயே.

(வ-ம்) ஒருதுல்லிதமானசீலையில் உழக்குப் பாலை தோய்த்துக் காய்ச்சி மறுபடியும் மறுபடியுந்தோய்த்து இப்படி இரண்டாழாக்குபாலை சீலைக்கேத்தி உலர்த்திவைத்துக்கொண்டு சபையோரைப்பார்த்து இந்தக்கிணற்றில் உழக்குப்பாலை ஊத்திவிடுங்கள் அப்படி ஊத்தியபாலை மறுபடி வேறே எந்தகிணற்றிலாவது குளத்திலாவது ஏரியிலாவது எந்தயிடங்காட்டினாலும் அந்தயிடத்தில்வரவழைத்துத் தருவேனென்று பந்தயமுங் கட்டிக்கொள்ளலாம்எவ்வளவு பால் ஊத்தினார்களோ அவ்வளவுஜலம்ஒருகுவளையில்கொண்டுபோய் நாலுபக்கமுந் திரைபோடச்சொல்லி முன்னால் பாலையேத்தி உலர்த்திய சீலையை இந்தஜலத்தில்போட்டு பிழிந்துகொண்டுவந்து காட்டவும் ஆனால் கறந்தபால்போல் நுரையிராது இவ்விதமாக வேரேசெய்தாலும் செய்யலாம் மேல்படி சீலையை மாத்திரம் கோமணமாக கட்டிக்கொண்டு செய்யவேணும் வேரே வஸ்திரங்கள் மிச்சமாயிருந்தால் சந்தேகப்படுவார்கள்.

உஉ-வது சோறுவேகாதிருக்க ஜாலம்.

வாகானசோறு வேகாதிருக்க
வறைகின்றவித்தைகளை வளமாய்க்கேளு
சீறானவத்திமரம் (சுட்டு) கழுதை
சிறுநீரால்விழ்த்துமதை யெடுத்துக்கொண்டு
காகானபெண்களுலை வைக்கும்போது
வாட்டிவைத்த கரியதனை யடுப்பில்போட்டால்
வேகாது மறுப்படியுஞ் சுத்திசெய்து
வைத்தாலே வேகுமடா வித்தைதானே.

(வ-ம்) அத்திமரத்தில் சிறுதுண்டுவெட்டிவந்துஅதைநன்றாயெரியவ்வந்து கழுதைமூத்திரத்தில் அவித்து எடுத்துக்கொண்டு நாயற்றுக்கிழமை மீனலக்கினம்பார்த்து நத்தைச்சூரிசெடிக்கு மஞ்சள் நூலினால் காப்புக்கட்டிவரவும் இன்னமொரு நாயிற்றுக் கிழமையில் துலாலக்கினம்பார்த்து நிர்வாணமாயிருந்து செடிக்குகாயம்படாமல் உச்சிவேர் அறாமல் பிடுங்கிவந்து மேற்படி அத்திமரம்சுட்டகரி அடுப்பிலும் இதைபான்டத்துள்ளேயும்போட்டால் ஏதுவானாலும் வேகாது மறுபடியும் அடுப்பைசாணியால்மெழுகி சுத்திசெய்தாலொழிய வேகாது.

உ௩-வது பழத்தில் ரத்தங்கட்டுஞ்சாலம்.

விந்தையாமெலுமிச்சம் பழந்தையப்பா
விதமாகசபையோர்க்கு நன்றாய்காட்டி
சந்தமும் செம்பரித்திப் பூவின்சாற்றை
சாரமாய் கத்தியின்மேல் பூசிப்பூசி
மந்தமாய் தடவியதை யுலர்த்திக்கொண்டு
மைந்தனே பழமதனை கையிலேந்தி
அந்திரமாங்காளிக்கி பலியிதென்று
அறுக்கையிலே ரத்தம்போல் சொரியும்பாரே.

(வ-ம்) ஒருகத்தியில் செம்பரித்திப்பூவின் சாற்றைப்பிழிந்து த டவியிரண்டு மூன்றுவிசைபூசி யுலர்த்தி வைத்துக்கொண்டு சபை யில்வந்து எலுமிச்சம்பழத்தை யேந்தி அந்தகத்தியினால் அறுத் தால் ஆடுகோழி யறுத்தால் எப்படியோ அப்படி இரத்தம்சொ ரியும் சிலர்பயப்படுவார்கள்.

உச-வது கோழிமுட்டை பறக்குஞ்சாலம்.

பாரப்பாகோழியது முட்டைவாங்கி
பக்குவமா யம்பிலியில் பாதியூற்றி
வாரப்பா சீமைபுடக் காடிபாதி
வளமான.ஊசிபிட ஸ்காந்தங்கொஞ்சம்
சேரப்பா இரண்டையுமே யுள்ளேதாக்கி
சிறுதுளையை காகிதத்தில் ஒட்டிப்போடு
பாரப்பா வெய்யலிலே வைத்துப்பாரு
பறக்குமடா சூடேறக் கீழ்நில்லாதே.

(வ-ம்) கோழிமுட்டையைவாங்கி அதில் சிறுதுவாரஞ்செய்து பாதியம்பிலியை யூத்திவிட்டு அதற்குபதில் சீமைக்காடியையூற்றி ஊசிகாந்தங் கொஞ்சஞ்சேர்த்து அதின்துளையை காகிதத்திலொட் டிவெய்யலில்வைத்தால் சூடேரினபிறகு கிளைமேற்கா[illegible].

உரு-வது கிணற்றிலிறங்கி சோறாக்குஞ்சாலம்.

அரிசியொரு காலபடிதான் மூட்டைகட்டி
அப்பனே சுண்ணாம்புக் கால்வாய்க்கிழே
வரிசைபாய் வைத்திரண்டு நாழிசென்று
வாங்கிபின் னெடுத்தவொரு குடுவைதன்னில்
அரையிடையா யரிசியிட்டு கிணற்றில்மூழ்கி
அவ்வளவே ஜெலம்வார்த்து மேலேதூக்கி

பரிவாகசபையோர்க்கு காட்டப்பாரீ
பதருவார் கருருவார் பணிகுவாரே

(வ-ம்) கால்படி அரிசியை மூன்றுபுறை துணிபோட்டு தில்அ மூட்டைகட்டி சுண்ணும்புகால்வாய் நிறைவைத்து வெந்தபிரகுள டுத்து வைத்துக்கொண்டு ஜாலமெடுக்குஞ்சபையில் ஒரு குடுவை வைத்து அதில்பாதிகுடுவை அரிசிபோட்டு இதைக்கிணற்றில் இற ங்கிச்சமைத்து வருவேன் என்று கிணற்றிலிறங்கி அரிசிக்குத்தகு ந்த ஜெலம்விட்டு குடுவையை தண்ணிக்குமேலே தூக்கிபிடித்திரு க்கவேண்டும் குடுவையை மூழ்த்தினால் அரிசியெல்லாம் போய் விடும் சற்றுநேரம்பிருந்து வரும்போது தலைமுதலானதுகளைகளை த்துக்கொண்டுவந்தால் சபையோர்கள் உன்னை ஜலத்துக்குள்ளே யிறங்கி சமைத்தானென்று ஆச்சரியப்படுவார்கள்.

உகூ-வது துணியில் சோளம்பொரிக்கும் வித்தை.

பணியவேசோளமதை மூட்டைகட்டி
பக்குவமாய்முன்போல் வைத்தெடுத்து
துணியதனைசவுக்கியமாய் பிடிக்கச்சொல்லு
துளியாகஜெலந்தெளித்து வருத்தையாகில்
மணிகளேமுத்துபோல் பொரியும்பாரு
மந்திரக்காரனென்று மயங்குவார்கள்
அணியணியாய் மீண்டிருக்கும் ஜாலவித்தை
அறைகின்ற வழியாகக் கேட்டுக்கொள்ளே.

(வ-ம்) சோளத்தை முன்போலவே மூட்டைகட்டி சுண்ணாம்புக்கால்வாயில் வைத்தெடுத்துக்கொண்டு துணியை சவுக்கியமாய் பிடிக்கச்சொல்லி நடுவில் சோளத்தைபோட்டுகொஞ்சம்ஜலத்தை தெளித்தால் முத்துப்போல்பொரியும் சபையோர்கண்டு ஆச்சரியப்படுவார்கள்.

உளவது மீன்பிடிக்கும் வித்தை.

கேட்டுக்கொள்கிருகுகள்ளித் தண்டையப்பா
திடமாகமுமுழமா தரித்துக்கொண்டு
வாட்டமாய் ரவுகளில் ஏரிதன்னில்
வளமான ஓங்களிலே குட்டைதன்னில்
நீட்டமாய் மளவு துலவுக்கொன்று
நெருங்கவே போட்டங்கே நின்றுபாரு
ஆட்டத்தை யன்சொல்வேன் மீன்களெல்லாம்
அடியோடேமேல்தோன்றி மிதந்துபோமே,

(வ-ம்) திருகுகள்ளித் தண்டை துண்டுதுண்டாக வெட்டி குளங்கிணறு முதலானயிடங்களில் நெருங்கப்போட்டு சற்றுநேரம் நின்றாலும் பேன்கொட்டையைவருத்துஉரித்தயிரு சரியாய்வைத் தரைத்து மேற்படி யிடங்களில் தூவினாலும் வேண்டிய வரையில் வாரிக்கொள்ளலாம்.

உஅ-வது கையில் பந்த மேந்துஞ்சாலம்.

ஆமடா கத்தாழை மடலின் சோத்தை
அப்பனே பில்லை பில்லை யாகவெட்டி
நாமடா கையிலே பதியவைத்து
நலமான சல்லாவை மேலேமூடி
வேமடா பந்தத்தை கொளுத்திக்கொண்டு
வையடா கையிலே யேற்றினுக்கால்
போமடா ஜெலம்போல குளிர்ந்திருக்கும்
பொய்யல்ல சத்தியமாய்செய்துபாரே.

(வ-ம்) கத்தாழைமடல் சோத்தை பில்லைபில்லையாக அறுத்து உள்ளங்கையில்வைத்து மேலே சல்லாத்துணியைமூடி எண்ணெய் பந்தம் கொளுத்திவைத்தால் அந்தினால்பந்தம் பிரகாசமாயெரியும் கைசுடாது சல்லாத்துணியும் வேகாது இது திஷ்டாந்திரம்.

உகூ-வது நெருப்பில்லாமல் கற்பூரங்கொளுத்தும்வித்தை.

சிறுபயறினளவு திமிர்பாஷாணத்தை
சூடமென்றக் கற்பூரக்கட்டிமீதில்
அறிவாகபதியவைத்து கையிலேந்தி
அப்பனேசபையோர்க்கு நன்றாய்காட்டி
குருவுக்கு தூபமென்று ஊதப்பாரீ
கொழுந்தோடி யெரியுமது குருவேசாட்சி
சிறுமணவூர்முனிசாமி செய்தஜாலம்
சிநேகிதரே உங்களுக்கு சொல்லச்சொன்னேன்.

(வ-ம்) சிறுபயரளவு திமிர்பாஷாணத்தை கற்பூரக்கட்டிமீதில் வைத்து கையிலேந்தி சபையில் நன்றாய்க்காட்டி குருவுக்கு தூபமென்று சொல்லி ஊதினால் குபீலென்று எரியும் சபையோரெல்லாம் ஆச்சரியப்படுவார்கள்.

இரண்டாம்பாகம்முற்றிற்று.